**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.43/2021

பி.வா.சா.2– மதியழகன் த/பெ மாரியப்பன் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 12.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.1–மதியழகன் த/பெ மாரியப்பன்</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. 1ம் பிரதிவாதி துரைசாமி மற்றும் அவரது சகோதரர் சுப்பிரமணியன் என்பவரிடமிருந்து 21.09.2010 அன்று சர்வே எண். 33ல் 1 ஏக்கர் 20 1/2 செண்ட் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேலும் என்னுடைய கிரைய நிலத்திற்கு கிழக்கு, வயலூர் கிரைய நிலத்திற்கு தெற்கு, சர்வே எண். 33ல் துரைசாமி பாக நிலத்திற்கு மேற்கு சர்வே எண். 33ல் கிணற்றிலிருந்து நேர்மேற்காக 12 அடி அகல அமைக்கப்பட்டுள்ள கிழமேல் பொது பாதைக்கு வடக்கு ஆகிய நான்கெல்லைக்கு உட்பட்டுதான் கிரையம் வாங்கினேன் என்றால் இல்லை சர்வே எ்ண்.33/1ல் பாதை இல்லை 33ல் பாதை ஒதுக்கப்பட்டது ஆனால் பாதை அமைக்கப்படவில்லை.

2. எனது பத்திரம் ஏற்பட்ட தேதியில் தான் மேல்புறம் முருகன் என்பவர் துரைசாமி, சுப்பிரமணியன் என்பவரிமிருந்து 1 ஏக்கர் 13 1/2 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியது வடபுறம், முருகன் கிரையம் வாங்கியது தென்புறம் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் 12 அடி கிழமேல குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அவ்வாறு அங்கு பாதை அமைக்கப்படவில்லை விவசாய நிலமாக உள்ளது. நான் காக்காயம் பட்டியில் குடியிருந்து வருகிறேன்.

3. 2010ம் ஆண்டு எனது இடத்திற்கு எந்த வழியாக சென்று வந்தேன் என்றால் வாரி வழியாகத்தான் சென்று வந்தேன். முருகன் கிரையம் வாங்கிய இடத்தில பாப்பாவிற்கு 1 ஏக்கர் 53 1/2 செண்ட் கிரையம் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த இடத்தையும் 2014ல் பாப்பாவிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் பாப்பாவிடம் கிரையம் வாங்கிய பத்திரத்திலும் நான்கெல்லை துரைசாமி நிலத்திற்கு கிழக்கு, வயலூர் கிராம எல்லைக்கு தெற்கு, ஆத்துவாரிக்கு மேற்கு, சர்வே எண். 33/2ல் பொதுகிணற்றடி நிலத்திற்கும் சர்வே எண். 33 /2 ல் கிழமேல் பாதைக்கு வடக்கு

என்று உள்ளது என்றால் சரிதான் ஆனால் அவ்வாறு பாதை அமைக்கப்படவில்லை .

4. 40 வருடங்களுக்கு முன்பு சுப்பு உடையார் அமைத்த பாதை இருந்தது என்றால் இல்லை. வாதி, முருகனிடமிருந்து கிரையம் வாங்கியது 1 ஏக்கர் 13 1/2 செண்ட் நிலம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் என்ன சர்வே எண் என்றால் சர்வே எண்கள் 33/1, 33/2 ஆகும். வாதி கிரையம் வாங்கிய நிலத்திற்கு ஒட்டி கிழக்குபுறம் துரைசாமி இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்கேயும், தெற்கேயும் வாதியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது இருந்தேனா என்றால் கடைசியாக வந்தேன்.

5. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் 12 அடி அகல பாதை உள்ளதாக குறிப்பிட்டுள்ளரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சர்வே எண். 33 ல் மொத்தம் 5 ஏக்கர் 90 செண்ட்டில் வாதியிடம் உள்ள 1 ஏக்கர் 13 1/2 செண்ட் போக மீதி நிலம் பூராவும் என்னிடம் துரைசாமியிடமும் உள்ளது என்றால் என்னிடம், துரைசாமியிடமும், பாப்பாவிடமூம் உள்ளது. பாப்பாவிடம் எந்த நிலமும் இல்லையென்றால் சரியல்ல. வாதி 2015 ல் நானும், துரைசாமியும் பாதை அழித்துவிட்டதாக போலிசில் புகார் கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

6. வாதியின் இடத்தை கிரையம் வாங்குவதற்காக 2015 ல் நானும், துரைசாமியம் பாதையை அழித்துவிட்டு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. பாதை அமைக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.16 18:34:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.